# தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்
**Tamil Study Centre Homebush Inc.**

PO Box 4032, Homebush, NSW 2140.

www.tsch.org.au
homebushtsch@gmail.com


## பேச்சுப் போட்டி 2025 ஆண்டு 7

அனைவருக்கும் வணக்கம்

**தமிழர் பண்பாடு**

"**தமிழன் என்றோர் இனமுண்டு தனியே அவர்க்கொரு குணமுண்டு**"
என்று பாடினார் நாமக்கல் கவிஞர் இராமலிங்கம்பிள்ளை.

எமது முன்னோர் பண்பட்ட வாழ்க்கை வாழ்ந்தவர்கள். நாடாண்ட மன்னன் முதல் குடிசையில் வாழும் குடிமகன் வரை குலம் காக்கும் பண்பாட்டைக் கட்டிக் காத்துப் பார்போற்ற வாழ்ந்தவர்கள் தமிழர்கள். தமிழ் இலக்கியங்கள் தமிழரின் பண்பாட்டை விளக்கும் கருவூலங்கள் என்றால் மிகையாகாது.

தமிழரின் தலை சிறந்த பண்பாடுகளாக உயிர்களிடத்தில் அன்பு, கருணை, ஈகை, நல்லொழுக்கம், உண்மை, நேர்மை, விருந்தோம்பல், பகிர்ந்து உண்டு வாழ்தல், பரந்த மனப்பான்மை என்பவற்றைக் கூறலாம். தமிழ் நீதி நூல்கள் யாவும் தமிழரின் வாழ்வியல் ஞானத்தை விளக்கி நிற்கின்றன.

வீரமும் மானமும் போற்றிய தமிழர் ஒழுக்கத்தை உயிரினும் மேலாகப் போற்றினர். சமூகம் நலம்பெற, நாடு வளம் பெற ஒவ்வொரு தனிமனிதனும் ஒழுக்கத்தைப் பேண வேண்டியது அவசியம் என்றது தமிழர் பண்பாடு.

"**ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்**
**உயிரினும் ஓம்பப் படும்**" என்பது திருக்குறள்.

"**தீதும் நன்றும் பிறர்தர வாரா**" என்பதையும் "**யாதும் ஊரே யாவரும் கேளிர்**" என்பதையும் தமிழர் உணர்ந்திருந்தனர். இவை தமிழரின் பண்பாட்டு முதிர்ச்சியைக் காட்டுகின்றன அல்லவா! உலகம் போற்றும் உயர்வான பண்பாட்டைத் தமிழர் பேணினர் என்பது பெருமையே!

இத்தகைய விழுமிய தமிழ்ப் பண்பாட்டைத் தமிழ் இளையோராகிய நாமும் பேணுவோம்.

நன்றி

வணக்கம்